முருகப்பெருமான் துணை

**மகான் இடைக்காடர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.05.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
நன்னெறி நடத்தி மக்களை
ஞானவான்கள் ஆக்க வேண்டி
ஞானமருளும் தேசிகா வாழ்க
2. வாழ்கயென வாழ்த்தி இனிதே
வழங்குவேன் அறிவுரை ஆசி
தாழ்விலா சோபகிருது தகர்திங்கள்
தக்கபடி அறுநான்குதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 24ம் நாள், 07.05.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் இடைக்காடர் யானும்
வையகம் வளம்பெற உரைப்பேன்
சோரமில்லா தலைமைகளும்
செகமெல்லாம் அமைய வேண்டி
4. வேண்டியே அரங்கன் காட்டும்
வேலவன் வழிபாடு தன்னை
உண்டான கலிவாழ் மக்கள்
உண்மைபட ஏற்று வணங்கி
5. வணங்கித் தொடர் வழிபாட்டை
வையகம் எங்கிலும் செய்ய
இணங்கி ஆறுமுகப் பெருமான்
இறங்கிக் காட்சிதனை தந்து
6. தந்துமே ஞானவான்கள்தனை
தக்கபடித் தேர்வு செய்து
எந்தவித சலனம் சுயநலமுமில்லா
ஏற்றமிகுத் தலைமைகளாக
7. ஆகவே உலகினில் படைத்து
அறிவிப்பேன் ஞான ஆட்சி
செகமெங்கும் அரங்கமகானால்
சிறப்பான தொண்டர்கள் வழி அரங்கேறும்

8. ஏறவே சுத்த சைவநெறி
எங்கும் சக்தியாக மாறி
மாறவே உலகம் எங்கிலும்
மறுக்கப்படும் உயிர்கொலை செய்வதும்
9. செய்வதை பாவமாக எண்ணி
சிந்தை தெளிவு கூடியே
மெய்ஞான வழி காட்டும்
முருகனே அரங்கன் எனும்
10. எனும் அறிவுத் தெளிவு
இனிதே சித்தியாகி மக்கள்
ஞானவான்களாகச் சிறப்பர்
ஞானிகளை பூஜித்து வர
11. வருகவே ஞானிகளாகும்படி
வல்லமை பெற்றுத் தேறுவர்
தரும ஞான லோகம் ஆக்கி
தரணியில் அற்புதம் படைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—